# 50 ஆண்டு சிங்கப்பூர்–இந்திய உறவுகளைப் பறைசாற்றும் நூல்

கடந்த 50 ஆண்டுகளாக சிங்கப்பூருக்கும் இந்தியாவுக்கும் இடையே உள்ள நல்லுறவைப் பறைசாற்றும் புதிய புத்தகம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

சிங்கப்பூருக்கு சர் ஸ்டாம் ஃபர்ட் ராஃபிள்ஸ் வந்தது முதல் சிங்கப்பூருக்கும் இந்தியாவுக்கும் இடையில் தற்போது உள்ள கூட்டு முயற்சிகள் வரை புத்தகத்தில் இடம்பெறுகின்றன.

இரு நாடுகளுக்கிடையே உள்ள உறவு காலப்போக்கில் வளர்ச்சி கண்டது பற்றியும் எதிர் கால உறவுகள் பற்றியும் தகவல் தெரிவிக்கும் அதிகாரபூர்வ நூலாகத் திகழ்வதே புதிய புத்தகத்தின் இலக்கு.

200 பக்கங்கள் கொண்ட இப்புத்தகத்தைப் புதுடெல்லியில் நேற்று அதிபர் டோனி டான் கெங் யாம் வெளியிட்டார்.

இரு நாடுகளுக்கிடையே உள்ள 50 ஆண்டு நல்லுறவைக் கௌரவிக்க அவர் இந்தியாவுக்கு நான்கு நாள் அதிகாரபூர்வப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

தென்காசிய ஆய்வுக் கழகத்தைச் சேர்ந்த நான்கு ஆய்வாளர்களின் இரண்டு ஆண்டுக் கால உழைப்பின் விளைவாக சிங்கப்பூர், இந்தியா: டுவர்ட்ஸ் எ ஷேர்ட் ஃபியூச்சர் எனும் தலைப்பு கொண்ட இப்புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது.

இவர்களது முயற்சிக்கு ஆய்வுக்கழகத்தின் மூத்த ஆய்வுக் கல்வியாளரும் இந்தியாவுக்கான சிங்கப்பூரின் முன்னாள் தூதருமான சீ சாக் முன் தலைமை தாங்கினார்.

இந்தப் புத்தகம் விற்பனைக்கு இல்லாவிட்டாலும் ஆய்வுக் கழகத்தின் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

“பிரிட்டிஷ் ஆட்சிக்கு முந்திய காலகட்டத்திலிருந்து இப்போது வரை இரு நாடுகளுக்கிடையில் உள்ள உறவைப் பற்றி புத்தகம் குறிப்பிடுகிறது. வாசகர்களுக்குச் சலிப்பூட்டும் வகையில் இல்லாமல் பலதரப்பினரை ஈர்க் கும் வகையில் புத்தகம் அமைக்கப்பட்டுள்ளது,” என்று ஆய்வுக் கழகத்தின் இயக்குநரும் நியமன நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் டான் டாய் யோங் தெரிவித்தார்.

“பொதுமக்கள் இதுவரை கண்டிராத புகைப்படங்களுக்காக எங்களது ஆய்வாளர்கள், இந்தியா, சிங்கப்பூர் மட்டுமின்றி பிற நாடுகளிலும் வலைவீசித் தேடினர். இந்தப் புகைப்படங்களை முதல்முறையாக வாசகர்கள் இப் புத்தகத்தில் பார்க்கலாம்,” என்று அவர் கூறினார்.

புத்தகத்துக்குப் பிரதமர் லீ சியன் லூங்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் முன்னுரை எழுதி உள்ளனர்.

சிங்கப்பூர்–இந்திய உறவுகள் பல நூற்றாண்டுகளாக இருந்து வருவதாகவும் சிங்கப்பூர் தனி நாடான பிறகு உறவுகள் மேலும் வலுவடைந்துள்ளன என்றும் இரு தலைவர்களும் முன்னுரையில் தெரிவித்துள்ளனர்.

“இரு நாட்டவருக்கும் உள்ள தமிழ் சினிமா, பாலிவுட் மீதுள்ள பொதுவான மோகம் மற்றும் சிங்கப்பூரில் உள்ள இந்துக் கோயில்களைக் கட்டவும் மறு சீரமைக்கவும் இந்தியாவிலிருந்து சிற்பக் கலைஞர்கள் வரவழைக்கப் படுவதன் மூலமும் உறவுகள் மறுஉறுதி செய்யப்படுகின்றன,” என்று திரு லீ குறிப்பிட்டார்.

2005ஆம் ஆண்டில் சிங்கப்பூருடன் இந்தியா அதன் முதல் முழுப் பொருளியல் ஒத்துழைப்பு உடன்பாட்டைக் கையெழுத்திட்டப் பிறகு இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மூன்று மடங்கு அதிகரித்திருப்பதைத் திரு லீ சுட்டினார்.

இதற்கிடையே, அதிபர் டோனி டான் புதுடெல்லியில் நேற்று பெரனாக்கான் காட்சிக்கூடம் ஒன்றைத் திறந்துவைத்து சிங்கப்பூர் உணவுத் திருவிழாவிலும் கலந்துகொண்டார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.